# நீலகேசியின் காலமும் கருத்தும்

***வி. சிவகுமார்***
***முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை***
***பாரதிதாசன் பல்கலைக்கழகம்***
***திருச்சிராப்பள்ளி***

நீலகேசி தமிழ்ச் சமணர்களின் தருக்கநூல். தமிழ் பௌத்த நூலான குண்டலகேசிக்கு மறுப்பாகத் தோன்றிய எதிர்நூல். இந்நூல் பௌத்த, சமண சமயக் காழ்ப்புணர்வையும் தருக்க உரையாடல்களையும் வெளிப்படுத்துகின்றது. எனவே சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையே மேலாதிக்கப் போட்டி நடைபெற்ற காலத்தில் நீலகேசி இயற்றப்பட்டிருக்க வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு நீலகேசியின் காலம் பற்றி ஆராய்ந்து கருத்துரைக்கப்படுகின்றது.

**நீலகேசியின் தோற்றம் குறித்த ஆசிரியர் கருத்து**

நீலகேசியின் அவையடக்கப் பாடல்கள் நீலகேசியின் தோற்றம் குறித்த ஆசிரியர் கருத்தை வெளிப்படுத்துகின்றன. இப்பாடல்கள் ஆசிரியர் தான் கண்ட கனவையே நூலாகப் படைத்துள்ளார் என்றும் இது பழைய ஆகமத்தில் காணப்படவில்லை என்றும் குறிப்பிடுகின்றது. எனவே நீலகேசியின் ஆசிரியர் நீலகேசி என்ற பெயரைத் தேர்வு செய்ததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்பதை ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

**நீலகேசியின் கதையும் தருக்கமும்**

சமணசமயத் தருக்கவியல் அறிஞரான சமந்தபத்திரர் எழுதிய இரத்தின கரந்தக சிராவகசாரம் என்னும் நூலில் நீலகேசியின் கதை ஒன்று அமைந்துள்ளது (அ. சக்கரவர்த்திநயினார் 1984:15). தமிழில் வழங்கும் அருங்கலச்செப்பு என்னும் நூலுக்கு மூலமான இரத்தின கரந்தக சிராவகசாரம், இல்லறப் பெண்ணின் சிறப்பை எடுத்துரைக்க நீலகேசியின் கதையைக் குறிப்பிடுகின்றது. இக்கதை சுருக்கமாக இங்குக் கொடுக்கப்படுகின்றது.

நீலகேசியின் கணவன் பௌத்தன். தன்னைச் சமணன் என்று கூறி ஏமாற்றி நீலகேசியை மணம் முடித்தவன். எனினும் நீலகேசி கணவன் சொற்படி வாழ்ந்துவந்தாள். புலால் உணவு உண்ணும் வழக்கமுடைய பௌத்தத் துறவிகளைக் கணவன் வீட்டிற்கு அழைத்து வந்து உணவிடக் கூறினான். சமண சமய நீலகேசி ஊண் உணவு உண்ணாதவள். ஊண் உணவு சமைக்க விரும்பாத நீலகேசி பௌத்தத் துறவியின் ஒற்றைச் செருப்பைப் பக்குவமாகச் சமைத்துக் கொடுத்தாள். செருப்பைக் காணாது பௌத்தத் துறவி தேடிய போது உண்மை வெளிப்பட்டது. கணவன், நீலகேசியைக் கற்பிழந்தவள் என்று குற்றம் சாட்டினான். இதனைப் போக்க நினைத்த நீலகேசியின் குலதெய்வம் (தேவதை) தன் கோயில் கதவை அடைத்தது. கற்புடைய மகளிரே இக்கதவைத் திறக்க முடியும் என்று அரசனின் கனவில் சென்று தேவதை கூறியது. அரசன் நாட்டின் அனைத்துப் பெண்களும் அக்கதவைத் திறக்க முயற்சிக்க வேண்டும் என்று உத்தரவிட்டான். அதன்படி நீலகேசி திறக்கும் போது கதவு திறந்தது. நீலகேசியின் கற்பை நாடே போற்றியது. தம் தவறைப் பௌத்த சமயக் கணவனும் உணர்ந்து வருந்தினான்.

கொல்லாமை நெறி மிக நுட்பமாக இக்கதையில் வலியுறுத்துவதோடு பௌத்த, சமண முரண்பாடும் மிகத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் குண்டலகேசி கதையைப் போன்று கணவனோடு நீலகேசி கொண்ட முரண்பாடும் குறிக்கத்தக்கது. இதனையே நீலகேசி ஆசிரியர் தன் நூலுக்குரிய பெயராகத் தேர்ந்து கொண்டார். தமிழகத்தைச் சேர்ந்த சமந்தபத்திரர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று எம்.எஸ். இராமசாமி ஐயங்கார் (1922:30) குறிப்பிடுகின்றார். ஆனால் எஸ்.சி. வித்யாபூசனா (1909:24) சமந்திபத்திரரின் தருக்கச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சமந்திரபத்திரர் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுகின்றார். மேலும்

சமணர;களின் முறைப்படுத்தப்பட்ட தருக்கவியல் வளர்ச்சி சித்தசேன திவாகரருக்குப் (கி.பி. 533) பின்பே தோன்றுகின்றது என்றும் எஸ்.சி. வித்யாபூசனா (1909:13) குறிப்பிடுகின்றார்.

பௌத்தத்தை விட சமணம் அரச ஆதரவுபெற்ற சமயமாக இருந்தது. எனினும் பௌத்தர்கள் தருக்கத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தனர். எனவே பௌத்தர்களை எதிர்கொள்வது சமணர்களுக்குச் சிக்கலாக இருந்தது. தமிழ்பௌத்த நூலான மணிமேகலை சமணர்களின் தருக்கம் அளவையியல் பற்றிக் குறிப்பிடாதது இங்கு எண்ணத்தக்கது. இந்நிலை கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மாறத்தொடங்கியது. இதன் விளைவாக பௌத்த சமயக் குண்டலகேசியை மறுக்கும் நோக்கில் சமண சமய நீலகேசியைக் கதைத் தலைவியாகக் கொண்டு நீலகேசி தோன்றியது. இது கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட சமணத் தருக்கவியல் சான்றுகள் காட்டுகின்றன. இதனைப் பௌத்த, சைவச் சான்றுகளும் நிறுவுகின்றன.

**நீலகேசியின் பௌத்தமும் காலமும்**

நீலகேசி குண்டலகேசிக்கு மறுப்பாகத் தோன்றியது. எனவே குண்டலகேசி விளக்கும் பௌத்த மெய்யியலை, நீலகேசி தெளிவாக விளக்கி மறுக்க வேண்டியுள்ளது அம்முறைப்படி நீலகேசியின் 513, 514ஆம் பாடல்கள் குண்டலகேசியின் ஆலயவிஞ்ஞானத்தை மறுத்துரைக்கின்றன. இவ் ஆலயவிஞ்ஞானம் யோகாசார பௌத்தத்தில் விளக்கப்படும் மையமான மெய்ப்பொருள் ஆகும். எனவே குண்டலகேசி யோகாசாரம் என்ற பௌத்தப் பிரிவைச் சார்ந்தது என்று விளக்கமடைகின்றது.

யோகாசார பௌத்தம் அசங்கர், மைத்ரேயநாதரால் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இம்மெய்யியல் காந்தாரம் பகுதியில் தோன்றியது (ராகுல் சாங்கிருத்யாயன் 2003:93) எனினும் தமிழகத்திலேயே பெருவளர்ச்சி பெற்றது. திண்ணாகர் (கி.பி. 480 - 540), தர்மபாலர் (கி.பி. 530 - 561), தர்மகீர்த்தி (கி.பி. 600 - 650) முதலான பௌத்தத் தமிழர்களால் யோகாசார பௌத்தம் பெருவளர்ச்சி பெற்றது. யோகாசார பௌத்தம் தமிழகத்தில் மிக உன்னத நிலையிலிருந்த கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே குண்டலகேசி இயற்றப்பட்டிருக்க வேண்டும். எனவே குண்டலகேசியை மறுப்பதற்காகத் தோன்றிய நீலகேசி கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியிருக்க வேண்டும்.

**நீலகேசியின் கதையும் சைவமும்**

நீலகேசியின் கதை கற்பனை என்பதை நீலகேசியின் ஆசிரியரே ஒப்புக் கொள்கின்றார். எனினும் நீலகேசியின் கதையை மையமாகக் கொண்டு நீலகேசியின் காலத்தைக் கணிக்கப்புகுந்த எஸ். வையாபுரிப்புள்ளை (1957:205), ‘பழையனூர் நீலியின் (நீலகேசியின்) வரலாற்றை ஞானசம்பந்தரும்,

**துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்**
**நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்**
**வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு**
**அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகளே** **(1,45,1)**

எனக் குறிப்பித்துள்ளார். இவ்வரலாற்றின் பிறிதோர் அமிசத்தைப் பெரியபுராணத்துள் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் (3) காணலாம். கர்ணபரம்பரை வரலாறாக கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் வழங்கிவந்த இந்தக் கதையிலிருந்து ‘நீலி’யைத் தமது மதப்பிரவர்த்தகியாக்கி நீலகேசி காவியத்தை ஜைனர்கள் அமைத்துள்ளனர்’ என்று குறிப்பிடுகின்றார். இதே கருத்தை பொ.வே. சோமசுந்தரனார் (1973:25), மு. அருணாசலம் (2005:76) முதலிய அறிஞர்களும் கொண்டுள்ளனர்.

ஒரு பார்ப்பனன் பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டு தன் செல்வத்தை இழந்தான். தன் மனைவி நீலியின் செல்வத்தைக் கவர்ந்து நீலியையும் தன் குழந்தையையும் கிணற்றில் தள்ளிக் கொன்றான். மறுபிறப்பில் அப்பார்ப்பனன் வணிகனாகப் பிறந்து பழையனூர் வழியாக வந்தான். அப்பொழுது பேயாக உலவிக் கொண்டிருந்த நீலி, பழைய மனைவியாக வந்து அவன் கையைப் பிடித்து இழுத்தாள். வணிகன் ‘நீ என் மனைவி அல்ல’ என்று கூறி ஓடினான். அவள் எழுபது வேளாளர்கள் கொண்ட அவையில் வணிகனின் மனைவி என்பதை நிறுவினாள். வணிகன் இவள் பேய் என்று

அஞ்சிய பொழுது அவ்வேளாளர்கள் பிணையாக இருந்தனர். ஆனால் நீலி அன்றிரவே அவ்வணிகனைக் கொன்றுவிட்டு மறைந்தாள். தம் சொல் பிழைத்தமைக்காக எழுபது வேளாளர;களும் தீயில் பாய்ந்து உயிர்விட்டனர்.

முனைநட்பாய் வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு அஞ்சும் பழையனூர் என்ற ஞானசம்பந்தர் அடிகளுக்கு விளக்கமாக இக்கதை புனையப்பட்டுள்ளது. வைதீகம், பௌத்தம் முதலான சமயங்களை வென்று புகழ்பெற்ற ஓர் இலக்கியத் தலைவியை வெள்ளாளர்களுக்கு எதிராக நிறுத்தும் பணியை இக்கதை செய்கிறது. இதன் வாயிலாக வெள்ளாளர்களுக்கு எதிராக சமணத்தைத் திருப்பிவிடக்கூடிய நோக்கமும் புலப்படுகின்றது. எனவே நீலகேசி கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய ஞானசம்பந்தருக்கும் முந்தியது என்பது தெளிவாகின்றது. ஆதலால் நீலகேசி கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியிருக்க வேண்டும்.

**நீலகேசியின் காலம் பற்றிய கருத்துரை**

பௌத்தத்தின் தனித்த தருக்கவியல் வளர்ச்சி காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திண்ணாகரிடமிருந்து தோன்றுகின்றது. திண்ணாகர் (கி.பி. 480 - 540) காலத்திலிருந்து பௌத்தர்கள் நியாயம், வைசேடிகம் முதலான மெய்யியல் பிரிவினரோடு கடுமையான உரையாடலை மேற்கொண்டனர். குறிப்பாக நையாயியர்களோடு நடத்திய உரையாடல் தலைமுறைகளாகத் தொடர்ந்தது. நியாயசூத்திரத்திற்கு உரை எழுதிய வாத்ஸ்யாயனாரை (கி.பி. நான்காம் நூற்றாண்டு) மறுத்து பிரமாண சமுச்சயா என்ற நூலைத் திண்ணாகர் எழுதினார். திண்ணாகரை மறுத்து உத்யோதகாரர் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) நியாயவார்த்திகா என்ற நூலை எழுதினார். திண்ணாகரைத் தொடர்ந்து தர்மகீர்த்தி (கி.பி. 600 - 650) பௌத்தத் தருக்கவியலை வளர்த்தெடுத்தார் (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா 2011:55,186). இவ்வாறு தமிழர்கள் வடமொழியில் நிகழ்த்திய உரையாடல்கள் தமிழ்ச்சமூகத்திலும் பிரதிபலித்தது. சமணத்திலிருந்து பௌத்தம் தழுவிய ஒரு கதைத்தலைவியை மையமாகக் கொண்டு குண்டலகேசி படைக்கப்பட்டது. இதன்வழி சமணத்திற்கு எதிரான தருக்கத்தைக் குண்டலகேசி மிகநுட்பமாக முன்வைத்தது. யோகாசார பௌத்த நூலான குண்டலகேசி திண்ணாகருக்குப் பிந்தைய பௌத்தத் தருக்கவியலை முன்வைத்தது. எனவே குண்டலகேசி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும்

சித்தசேன திவாகரருக்குப் (கி.பி. 533) பின்பு சமணத் தருக்கவியல் பெருவளர்ச்சி பெற்றது. சமந்தபத்திரர் தமிழகத்தில் தோன்றி சமணத் தருக்கவியலை வளர்த்தெடுத்தார். சமந்தபத்திரரின் இரத்தின கரந்தக சிராவகசாரம் கூறிய ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நீலகேசி பௌத்தத்தின் சவாலை எதிர்கொண்டது. நீலகேசி ஓர் அழகான கற்பனையின் மூலம் புத்தரையே சமணத்தைத் தழுவச்செய்தது. இது கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடைபெற்றது. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியுற்ற சைவம் சமணத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சமணத்தின் தருக்கத்தை எதிர்கொள்ளமுடியாத சைவம் நீலியின் கதையைத் திரித்தது. சமணத்தை வேளாளர்களுக்கு எதிராக நிறுத்த முனைந்த சைவம் அதற்குரிய வாய்ப்பாக நீலியின் கதையைத் தேர;ந்து கொண்டது. ஞானசம்பந்தர் தொடங்கி வைத்த இக்கதைக்கான கரு சேக்கிழார் காலத்தில் பெருவளர்ச்சி பெற்றது. சமணத்தை வேளாளர்களுக்கு எதிராக நிறுத்தும் முயற்சியில் வெற்றியும் பெற்றது.

**துணைநூல் பட்டியல்**


1. சக்கரவர்த்திநயினார் அ. நீலகேசி (சமயதிவாகரவாமனமுனிவர் உரையுடன்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
2. சோமசுந்தரனார் பொ.வே. 1984. நீலகேசிவிளக்கவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1973
3. அருணாசலம் மு. தமிழ் இலக்கியவரலாறு, திபார்க்கர்,சென்னை- 14. 2005
4. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, இந்தியத் தத்துவவியல் ஓர் எளியஅறிமுகம், அலைகள் வெளியீட்டகம், சென்னை- 24.
5. ராகுல் சாங்கிருத்யாயன், 2011. பௌத்தத் தத்துவவியல், என்.சி.பி.எச்., சென்னை- 98. 2003
6. வையாபுரிப்பிள்ளை எஸ். காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்,சென்னை- 5. 1957
7. RamasamyAyyangar M.S. South Indian Jainism (Part - 1), Premier Press, Chennai. 1922
8. Vidyabhusana S.C. History of the Mediaeval School of Indian Logic, University of Culcutta, Culcutta. 1909